RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224108

OPEN ACCESS



# வேள்பாரி புதினத்தில் கதை மாந்தர்களின் சமூகப் பங்களிப்புகள்

ந. தரணி [அ, *], து. ரேணுகாதேவி [அ]

[அ] தமிழாய்வுத்துறை, திருவள்ளுவர் அரசு கலைக் கல்லூரி, இராசிபுரம் - 637401, இந்தியா

# Social Contributions of Storytellers in the Velpari Novel

N. Dharani [a, *], D. Renugadevi [a]

[a] Department of Tamil, Thiruvalluvar government Arts college, Rasipuram - 637401, India

* Corresponding Author: dharaniyaalkothai@gmail.com

Received: 15-06-2022
Revised: 30-09-2022
Accepted: 05-10-2022
Published: 09-10-2022

Check for updates

**ABSTRACT**

From the time humans appeared in the world, they have been seen as beings who share the feelings they experience within themselves with others. Even before humans invented languages, they communicated their information through gestures and auditory or visual codes. Later, having discovered languages, they have spread their experiences through stories. It is said that messages conveyed orally hold greater power. In that sense, stories that travel through life with people become indispensable. For many centuries, Tamil literature has preserved numerous stories within itself. Such stories are now presented in modern literature as novels, short stories, and novellas. Among Tamil literary forms, novel literature has established a distinct place for itself in the twentieth century and shines prominently. In that novel literature, the historical novel genre is represented by the Velpari novel, which narratively depicts the story of Pari, one of the philanthropists. This study focuses on exploring the social contributions of humans as presented in the story within this novel.

**Keywords:** Velpari novel, Storytellers, Social Contributions, Communication

## முன்னுரை

உலகத்தில் மனிதன் தோன்றிய காலம் முதலே அவன் உள்ளத்தில் உணரும் உணர்வுகளைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளும் குணமுடையவனாகக் காணப்படுகிறான். மனிதன் மொழிகளைக் கண்டுபிடிக்கும் முன்பே சைகைகளாலும் ஒலி, ஒளிக் குறியீட்டுச் செய்திகளாலும் தம்முடைய தகவல்களைப் பரிமாறிக் கொண்டிருந்தான். பின்னர் மொழிகளைக் கண்டறிந்து அவற்றின் மூலம் கதைகளின் வாயில்களாகத் தங்களின் அனுபவங்களைப் பரப்பி வந்தனர். வாய்வழியாகக் கொண்டு செல்லும் செய்திகளுக்கு அதிக வலிமை உண்டு என்று குறிப்பிடப்படுகின்றது. அந்த வகையில் மக்களிடன் உயிர்ப்புடன் பயணிக்கும் கதைகள் மிகவும் இன்றியமையாததாக அமைகின்றன. பல நூற்றாண்டு காலமாகத் தமிழ் இலக்கியங்கள் பல கதைகளைத் தம்முள்ளே புதைத்து வைத்திருக்கின்றது. அத்தகைய கதைகள் தற்போது நவீன இலக்கியங்களில் புதினங்கள், சிறுகதைகள், குறுநாவல்கள் என்று வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ் இலக்கிய வகைகளில், புதின இலக்கியம் இருபதாம் நூற்றாண்டில் தனக்கெனத் தனி இடத்தைப் பெற்று சிறந்து விளங்குகின்றது. அந்தப் புதின இலக்கியத்தில் வரலாற்றுப் புதின வகையைச் சார்ந்த வேள்பாரி புதினம் வள்ளல்களில் ஒருவரான பாரியின் கதையைப் புனைவுடன் எடுத்துரைக்கின்றது. இப்புதினத்தில் இடம்பெறும் கதை மாந்தர்களின் சமூகப் பங்களிப்புகள் பற்றி ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

## கதை மாந்தர்கள்

வீரயுக நாயகன் வேள்பாரி புதினம் விகடன் வார இதழில் 29.10.2016 முதல் 29.11.2018 வரை பாரியின் வரலாற்று புனைவுகளுடன் வீரயுக நாயகன் வேள்பாரி என்னும் தலைப்பில் நூற்றுப்பதினொரு அத்தியாயங்களைக் கொண்டு தொடர்கதையாக வெளிவந்தது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய சங்க இலக்கியப் பாடல்களின் வரியில் குறிப்பிட்ட 'பாரி' என்னும் குறுநில மன்னனை அவனுடைய கொடைத்திறத்தால் கடையெழு வள்ளல்களில் ஒருவனாக மக்கள் அறிந்திருக்கின்றனர். ஆனால் அவனைப் பற்றிய தகவல்கள் முழுமையாக அறியமுடியவில்லை. மு.ராகவய்யங்கார், ரா.இராகய்யங்கார் ஆகியோர் பாரியின் வரலாற்றை எழுதி இருக்கின்றனர். வேளிர் வரலாறுகளும் பாரியின் வரலாற்றைக் குறிப்பிடுகின்றன. தற்போது சு.வெங்கடேசன் பாரியின் வரலாற்றை 'வீரயுக நாயகன் வேள்பாரி' என்ற தன்னுடைய நாவலின் மூலம் எடுத்துக்காட்டுகிறார். இந்நாவலில் எண்ணற்ற கதை மாந்தர்களில் இடம்பெறுகின்றனர். சு.வெங்கடேசன், அவர்களின் சமூகப் பங்களிப்பைப் பற்றி விளக்குகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## கொடை

பறம்பு மலையை ஆட்சி செய்த அந்தப் பாரியின் கருணை கடலைவிடப் பெரியது என்று பறம்பு வீரன் கூறுவதன் மூலம் அறியலாம். பறம்பு மக்களை அதிகாரமற்ற அன்பினால் ஆட்சி செய்து வந்தான். இயற்கை வளங்களைப் பேணிக்காத்து இயற்கையோடு இணைந்த வாழ்வை மேற்கொண்டு வந்தான். வள்ளல்களின் தலைநாயகனாக விளங்கும் வேள்பாரியின் ஆளுகையும் ஆற்றலும் வாரிக்கொடுக்கும் வள்ளல் தன்மையும் நிலமெங்கும் நாளுக்கு நாள் பரவியது. பாணர்களுக்கு வாரி வழங்குவதில் அரவணைத்துக் காக்கும் தாயுள்ளம் கொண்டவனாக விளங்கினான். அதனை,

> "பாணர்கள் தங்களின் நினைவில் இருந்து மட்டும் அல்ல, நினைவு மறந்தும் பாடும் பாடலாகப் பாரியின் பாடலே இருந்தது. புகார் நகரில் நாளங்காடியில் காவல் புரிந்த
>
> ஒரு வீரன், கடைவீதியில் அலைந்து கொண்டிருந்த பாணர் குழு ஒன்றைப் பார்த்துக் கேட்டான், "பாரி பறம்பை ஆள்கின்றானா அல்லது பாணர்களை ஆள்கின்றானா?" (சு.வெங்கடேசனின்.,2018)

பசித்தவரின் குரலாகப் பாரி மாறி எல்லா நாட்டு மக்களிடம் நிறைந்திருந்தான். பசியைப் போக்கும் யாரும் இல்லாத காட்டுப்பகுதியில் பாணர்கள் காலில் சலங்கை கட்டித் துடிப்பறை முழங்கப் பாரியைப் பாடினால் பசியைக்கூட மறந்துப் போயினர்.

பெரிய மன்னர்களிடம் பரிசில் வேண்டிச் சுற்றி அலையும் பாணர்கள்கூட ஒரு முறையாவது பறம்பு நாடு சென்று திரும்ப வேண்டும் என்று விரும்பினர். மன்னர்கள் பலரிடம் பரிசில் பெற்ற பாணர்கள் பாரியிடம்தான் பரிசுகளோடு அன்பையும் கருணையையும் பெற்றுத் திரும்பினர். பாணர்களுக்குப் பரிசுகளை அள்ளி அள்ளிக் கொடுப்பது மட்டும் இல்லாமல் வள்ளல்கள் எல்லாரையும் விடவும் உயர்ந்தவனாகப் பாரியைப் போற்றி காரணம் படர்வதற்குக் கொழுகொழும்பின்றித் தவித்த முல்லைக்கொடிக்குத் தான் ஏறிவந்த தேரினையேக் கொழுகொம்பாகக் கொடுத்ததுதான் என்று தமிழ்ச் சான்றோர்கள் குறிப்பிடுகின்றனர். அதனை,

> "பூத்தலை யறாஅப் புனைகொடி முல்லை
>
> நாத்தழும் பியப்பட படா தாயினும்
>
> கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
>
> பரந்தோங்கு சிறப்பிற் பாரி" (புலியூர்க் கேசிகன்.,2019)

என்று பாரி முல்லைக்குத் தேர் தந்ததைப் புறம். 200 - ன் பாடல்களின் வழி நாம் அறியலாம். இக்கருத்தைக் கேட்கும் மக்கள் மனதுக்குள்ளும் இன்றளவும் ஒரு பச்சிளங்கொடியாகத் துளிர்விட்டு விளங்குகின்றது.

## வீரம்

வேள்பாரி கொடைகளில் சிறந்து விளங்கியதைப் போலவே வீரத்திலும் சிறந்து விளங்குகின்றான். பருவ வயதில் இருந்தே போர் பற்றிய அறிவைப் பெற்று வீரனாகத் திகழ்ந்தான். பறம்பின் தலைவனான போதே பாரியின் வாள்வீச்சுத்திறன் வாய்ந்ததாக இருந்ததைச் செம்மாஞ்சேரலுடன் ஏற்பட்ட போரின் மூலம் அறியலாம். அவற்றை,

“ஒளி சரியப்போகும் அந்தக் கடைசிப் பொழுதில் பாரியின் வாள்வீச்சு எதிர்கொள்ள முடியாததாக இருந்தது. இருதரப்பு வீரர்களும் நிகழ்வதை உற்றுப் பார்த்துக்கொண்டிருக்க, கணநேரத்தில் செம்மாஞ்சேரலின் தலையை இடப்புறக்காட்டை நோக்கி சீவிச் சரித்தான் வேள்பாரி.” (சு.வெங்கடேசனின்.,2018)

பறம்பு மலையில் இருக்கும் சோமபானத்தைச் செம்மாஞ்சேரல் என்ற சேர நாட்டு மன்னன் கேட்டு ஆளனுப்பியதற்கு மறுத்துக் கூறியதைக் கேட்ட செம்மாஞ்சேரல் பெருஞ்சினங்கொண்டு சேரர்படை பறம்பின் மேற்கு மலை முகடுகளை நோக்கி அணிவகுத்துச் சென்று பாரியுடன் போரில் ஈடுபட்டான். அதில் பாரியின் வாள்வீச்சால் செம்மாஞ்சேரலின் தலை துண்டிக்கப்பட்டது. பாரி ஒவ்வொரு போரிலும் புதிய புதிய ஆயுதங்களைக் கண்டறிந்தான். மூவேந்தர்களும் ஒவ்வொரு காரணங்களுக்காகத் தனித்தனியாகப் படையெடுத்துப் பாரியிடம் தோற்றனர். மூவேந்தர்களும் ஒன்று கூடி பறம்பை அழிக்கப் போர் தொடுக்க முற்பட்டனர். தட்டியங்காட்டில் போர் முண்டது. அப்போரில் பறம்பின் வீரர்களின் பங்கு அளப்பரியது. இறுதியாகப் போரில் பங்கு கொண்ட பாரியின் போர் யுத்தி மிகச் சிறந்ததாக விளங்கியது. இணையற்ற வீரனாக வேள்பாரி போரில் பங்கு கொண்ட விதம் பார்ப்பவரை பயங்கொள்ள செய்தது. அவற்றை,

“ஏறுழ்தடியை சுழற்றிக்கொண்டு முன்னேறியவன் பறம்பின் தலைவன் பாரி அவனைப் பார்த்த கணம், நினைவின் புலனுக்குள் மூழ்கிக்கிடந்த ஆதி அச்சம் பீறிட்டு மேலே வந்தது. உள்நரம்புகள் அதிரத்துவங்கின. அவனது நடுக்கத்தை மீறி ஆயுதத்தை இறுகப்பற்ற முடியவில்லை அவனது. உள்ளியக்கம் நிலைகுலைந்து கொண்டிருந்தது. தட்டியங்காட்டில் எத்தனையோ முறை பறம்புத்தளபதிகளிடம்

தப்பிப்பிழைத்தவன் பாரியின் எதிரே நின்றுகொண்டிருந்தான். அவனைப் பார்த்த வேகத்தில் நான்கு எட்டு முன்னோக்கிப் பாய்ந்தான் பாரி. பாயும் வேகத்தில் ஏறுழ்தடி காற்றைக் கிழித்து முன்னர்ந்து கொண்டிருந்தது. ஆட்டுக் குட்டியைப் போல யானையொன்று தூக்கி வீசப்படுவதை தென்கொடியில் நின்றிருந்த வேந்தர்கள் மூவரும் பார்த்தனர்.” (சு.வெங்கடேசனின்.,2018)

பாரின் வீரத்தை கண்ட மூவேந்தர்களும் பயந்து கொண்டிருந்தனர். எவராலும் கையாள முடியாத ஏறுழ்தடியைப் பாரி சுழற்றிக் கையாண்ட விதம் பார்ப்பவரை நிலைக்குழையச் செய்தது. பாரியின் வீரத்தைப் பார்த்து தங்கள் உயிரைக் காத்துக் கொள்ள மூவேந்தர்களும் பயந்து ஓடினர். இதனை சு.வெங்கடேசனின் வேள்பாரி புதினத்தில் எடுத்துரைக்கின்றார்.

## அறநெறி தவறாமை

மனிதர்களின் சரியான வாழ்க்கை முறைகளையும் நல்வொழுக்கக் கருத்துகளையும் எடுத்துரைக்கும் எண்ணங்கள் கோட்பாடுகள் மற்றும் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு விளங்குவது அறநெறிக் கருத்துகளாகும். தனிமனிதனின் எண்ணங்கள், செயல்கள், சொல் ஆகிய மூன்றையும் ஒருங்கினைத்து இலக்கியங்கள் தத்துவங்கள் மற்றும் மதங்கள் வழியாக முன்

வைக்கப்பட்டு அறநெறி தவறாமையான வாழ்வுக்கு வழிநடத்துகின்றது. அறநெறியைப் பட்டியலிட்டுக் காட்டுவது எளிதான செயலாகும். அறநெறிகள்தான் வாழ்வின் அடிப்படையான ஒழுக்கம் எனலாம். அறநெறிகளில் ஒருசில அடிப்படை நெறிகள் முதன்மையானதாகக் கருதப்படுகின்றது. நேர்மை, கடமை, நடுவுநிலை தவறாமை நற்பண்புகளையும் நீதியையும் விட்டு விலகாமல் இருத்தல், அதாவது தர்மத்தின்படி வாழ்தல், நேர்மையாக இருத்தல், சரியான பாதையில் நடத்தல் ஆகியவற்றை எடுத்துரைப்பதாகும். சு.வெங்கடேசனின் வேள்பாரி புதினத்திலும் அறநெறி கருத்துகளை எண்ணற்ற இடங்களில் எடுத்து விளக்கியுள்ளார். பாரி தன் நாட்டு மக்களிடமும், பிற குலத் தலைவர்களிடமும் நேர்மையாகவும் நற்பண்புகளையும் நீதியையும் விட்டு விலகாமல் நன்முறையில் ஆட்சி செய்துள்ளான். பிறருக்கு வரும் துன்பங்களைத் தனக்கு வந்ததாக எண்ணி துயருற்றான் என்பதை,

"நீங்கள் எங்களின் தாயாதிகள். உங்களைக் கொன்று குவித்த கொலைகாரர்கள் நாங்கள்"... சொல்லிக் கதறும் அவனது கையைக் கட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. யாராலும் எதுவும் செய்ய முடியவில்லை. சூழலின் அவலம் தாங்க முடியாததாக இருந்தது. நெஞ்சு வெடிப்பதைப் போலக் கதறும் பாரியின் கதறலைப் பறம்பு முதன்முறையாகக் கேட்டது. காலம்பனைத் தனது மார்போடு அனைத்துப் பிடித்த தேக்கன் பாரியைப் பார்த்துக் கைக்குவித்து வேண்டினான். "கதறாதே நீ பறம்பின் தலைவன். உனது கண்ணீரை இம்மண் அறியக் கூடாது. கதறாதே, பாரி!" சொல்லிக் கதறினான் தேக்கன்." (சு.வெங்கடேசனின்.,2018)

என்று பாரி தம் முன்னோர்களின் வழி வந்த சூலிவேளின் குலத்தைத் தாக்கியதை எண்ணி உயிர் வரை வலி கொண்டு வருந்தினான். தட்டியங்காட்டுப் போரில் மூவேந்தர்களின் நிலைமான் கோல்சொல்லியாக இருந்த திசைவேழர் நடுநிலை தவறாமல் விளங்கினார். மூவேந்தர் படைகளும் போர் விதியை மீறினர். போர் முடியுறும் முரசின் ஓசை கேட்கும் முன் இரவாதன் தாக்குதலை எதிர்க் கொள்ள முடியவில்லை. அவனின் தாக்குதலைக் கண்டு அதிர்ச்சிக்குள்ளாகினர். முரசின் ஓசை கேட்ட பிறகு இரவாதன் ஆயுதங்களைத் தாழ்த்திய பிறகு கோழைக்களைப் போல பின்னாலிருந்து பொதியவெற்பனும் சோழவேழனும் இரவாதன் மீது அம்பெய்திக் கொன்றனர். அவற்றைக் கோல்சொல்லியாக இருந்த திசைவேழர் தவறு என்று சொல்லி இருவரும் ஆயுதங்களைத் துறந்து போர்க்களத்தை விட்டு வெளியேறுங்கள் என்று கூறியதைக் கேட்ட சோழவேழனும் பொதியவெற்பனும் அலட்சியமாக இருந்தனர். திசைவேழரின் சொல்லுக்கு மரியாதை இல்லை என்பதனால்,

"போர் விதிமுறைகளை ஏற்று முரசின் ஓசை கேட்டதும் ஆயுதங்களைத் தாழ்த்திய இரவாதனே! உன்னிடம் மன்னிப்புக் கோருகிறேன். விதிமுறைகளை மதிக்கத் தெரியாத வேந்தர் படைக்கு நிலைமான் கோல் சொல்லியாக இருந்த நான் இந்தத் தவறுக்குப் பொறுப்பேற்று எனக்குத் தண்டனை வழங்கிக்கொள்கிறேன்." (சு.வெங்கடேசனின்.,2018)

என்று கூறிய திசைவேழர் தனக்கு எதிரே இருந்த நாழிகைக்கோல்களை எடுத்து தனக்குத் தானே அம்பு எய்தி குருதி கொப்பளிக்க பரணின் மேல் மெல்லச் சாய்ந்து உயிர் துறந்தார். திசைவேழர் அறநெறி தவறாமல் நிலைமான் கோல்சொல்லியாகத் திகழ்ந்ததை சு.வெங்கடேசன் வேள்பாரி புதினத்தில் விளக்கி எடுத்துக்காட்டியுள்ளார்.

## சடங்குகள்

ஒரு குறிப்பிட்ட பாரம்பரியம் அல்லது நம்பிக்கையின்படி ஒரு நிகழ்வைச் செய்வதற்கான முறையைச் சடங்கு எனலாம். ஒரு வாழ்க்கை மாற்றத்தைக் குறிப்பதற்கும் சமூக உறவுகளை வலுப்படுத்துவதற்கும் ஆன்மீக முறையில் திருப்தி அடைவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. மனித வாழ்வின் முக்கியமான தருணங்களான பிறப்பு, திருமணம், இறப்பு போன்ற தவிர்க்க முடியாத நிகழ்வுகளின் போது சடங்குகள் செய்யப்படுகின்றன. சாதி, மத, இன பாகுபாடின்றி அனைத்து வகையான மக்களிடையே பொதுவான சடங்குகளான திருமணச் சடங்குகள், பூப்புச் சடங்குகள்,

இறப்புச் சடங்குகள் அனைவருக்கும் பொதுவான சடங்குகள் ஆகும். சு.வெங்கடேசனின் வேள்பாரி புதினத்தில் பல சடங்குகள் இடம் பெறுகின்றன. அவை,

- காடறி சடங்கு
- திருமணச் சடங்கு
- நிறைசூழ்ச் சடங்கு
- யட்சினி சடங்கு
- காடறி சடங்கு
- பறம்பு மலையில் வாழும் ஆண் பிள்ளைகள் சிறுவயதிலேயே காட்டைப் பற்றிய அறிவைப் பெறுவதற்குப் பறம்பின் ஆசான் தேக்கன் தலைமையில் காட்டிற்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். அப்போது பறம்பின் குல நாகினிகளின் மூலம் கசப்பான மூலிகையை அவர்களின் தொண்டையில் வைத்து சடங்குகள் செய்கின்றன. அவற்றை,
- "ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் சாமப்பூ, கார்காலத்தில்தான் பூக்கத் தொடங்கும். அதன் பிறகே மாணவர்களை அழைத்துக் கொண்டு காடறியப் புறப்படும் சடங்குகள் தொடங்குகின்றன. குலநாகினி மலைவேம்பின் இலையில் சாறெடுத்து அடித்தொண்டையில் ஊற்றும் நிகழ்வுதான் காடறிதலின் தொடக்கம்". (சு.வெங்கடேசனின்.,2018)
- காட்டின் ஆதிகசப்பான இந்த மலை வேம்பு கசப்பை மாணவர்கள் வாயில் வைத்துக்கொண்டு எச்சிலைக்கூட விழுங்கமாட்டார்கள். வாரக் கணக்கில் அவர்கள் வாயில் சுரக்கும் கசப்பை விழுங்க வேண்டி இருப்பதால் சிறுவர்கள் காடறியப் புறப்படவே தயங்குவார்கள். இவற்றைத் தாங்கிக் கொண்டு காடறியச் செல்லும் சிறுவர்கள் மாவீரர்களாகத் திரும்பி வருகின்றனர்.

## திருமணச் சடங்கு

திருமணச் சடங்கில் மக்கள் வழிவழியாக வெற்றிலைத் தாம்பூலம், பழ வகைகள் ஆகியவற்றை ஆண் வீட்டாரும் பெண் வீட்டாரும் மாற்றிக் கொள்கின்றனர். அரச குடும்பங்களில் திருமண விழாக்கள் நடைபெறுகின்றன. மலரணியும் சடங்குகளும் திருமணச் சடங்குகளும் செய்யப்படுகின்றன. அரசர்கள் மற்றும் வணிகர்கள் வீட்டுத் திருமணத்திலும் சிறந்தவர்களுக்குப் பரிசுகளையும் வழங்குகின்றனர். வேள்பாரியில் இடம்பெறும் திரையர்களின் மரபில் வீரன் காட்டெருமையை வீழ்த்தி ஆண் வெற்றிலையைப் பறித்து வந்து ஊர் மந்தையில் வத்தால் பொழுது சாய்வதற்குள் ஊர் பெரியவர்கள் பெண் வெற்றிலையை எதிராக வைத்து அந்த வீரனுக்கு மணமுடியவேண்டும். அவற்றை,

"காட்டெருமையை அடக்கியவன் மாலைக்குள் மந்தையில் வெற்றி இலையை வைத்து மணமுடிக்க வேண்டும். எனவே அடுத்தக்கட்ட வேலைகள் வேகமாக நடந்தன. பொழுது சாய்வதற்குள் ஊர் மந்தைக்கு வந்து அவன் வெற்றி இலையை வைத்தான். பெரியவர்கள் என்னவென்று கேட்டார்கள். அவனுக்குறியவளைச் சொன்னான் அவளும் வெற்றி இலையோடு மேலேறினாள். ஊர் மத்தியில் இருவரும் வெற்றி இலையை மாற்றி எடுத்துக் கொண்டனர். ஊன் தயாரானது. கொண்டாட்டம் தொடங்கி இரவு முழுவதும் நீண்டது." (சு.வெங்கடேசனின்.,2018) என்று காட்டெருமையை வீழ்த்திய வீரனுக்கு அவன் விரும்பிய பெண்ணை மணமுடித்து தருகின்றனர்.

## நிறைசூழ்ச் சடங்கு

கருவுற்ற நிறைமாதப் பெண்களுக்கு நடத்தப்படும் விழா நிறைசூழ் விழா என்று அழைக்கின்றனர். பறம்பில் வாழும் மக்கள் அவர்களின் முன்னோர்களான முருகன் வள்ளி

நினைவாக இருக்கும் சந்தன வேங்கை மரங்களைத் தேர்வு செய்து கருவுற்ற நிறைமாதப் பெண்களுக்கு அங்குச் சடங்கு செய்கின்றனர். அச்சடங்கை "வள்ளிக்கானம்" என்று கூறுவர். பறம்பில் வாழும் மயிலாவிற்கு நிறைசூழ் விழா நடைபெறும் போது அவளுடைய கணவன் நீலன் வாகைப் பூவைக் கொண்டு வருகிறான். அப்போது ஆதினி நீ கொண்டு வந்த பூவை இப்போது அவளுக்குச் சூட்டு என்று கூறியதற்கு நீலன்,

"நிறைசூழ் வண்ணின் மலர்ந்த முகத்துக்கு இணையான மலர்

இதுரை கண்டறியப் படவில்லை. நான் எந்த பூவைச் சூட்டுவேன்"

(சு.வெங்கடேசனின்.,2018)

என்று கூறினான். பெண்கள் மட்டும் கொண்டாடக்கூடிய விழா நிறைசூழ் விழாவாகும். பெண்களின் விழாதான். இயற்கையின் திருவிழா. ஆண்களுக்கு இதுபோல் எந்த விழாவும் இல்லையே என்று அங்கு வரும் ஆண்கள் அனைவரும் வருத்தம் கொண்டிருந்தனர்.

## யட்சினி சடங்கு

போர் நடைபெறுவதற்கு முன்னர் தாங்கள் வெற்றி பெற வேண்டும் என்று ஒவ்வொரு போர்ப் படையினரும் நடத்தப்படுவது யட்சினி சடங்கு மேற்கொள்கின்றனர். பறம்பு தலைவன் பாரியும் போரில் வெற்றி பெற வேண்டுமென்று நண்பகலில் போர்ச் சடங்கை மூன்று மூலைகளிலும் தொடங்கினார். ஆனால் சடங்குகள் இரவான போதும் முடியாமல் இருந்தது. எதிரி படைகளும் யட்சினிக்கான சடங்கை நடத்துகின்றார்கள். அதனை,

"காக்கும் போருக்கும் தாக்கும் போருக்கும் அந்தந்தத் தெய்வ வழிபாட்டுச் சடங்குகளை நடத்துவார்கள். ஆனால் பேரழிவை உருவாக்கும் போருக்கு யட்சினி வழிபாட்டை நடத்துவார்கள். அவள் அழிவின் தேவதை, எதிரியின் படை நோக்கி அவளை ஏவிவிடும் சடங்குக்கான பெரும்பலியை அவர்கள் கொடுத்துள்ளனர்." (சு.வெங்கடேசனின்.,2018)

என்று மூவேந்தர்களின் படைகளும் யட்சினி சடங்கு செய்து எதிரி படையை நோக்கி அழிவின் தேவதை பெரும்பலியை ஏற்படுத்த ஏவிவிட்டனர். யட்சினி மனிதப் பிணங்களைச் சூடி மகிழ்வாள். போரில் வெற்றி பெற யட்சினிக்கான சடங்கை செய்து பேராற்றலைக் கொண்ட அழிவின் தேவதையாக வழிபட்டனர் என்பதை சு.வெங்கடேசனின் வேள்பாரி புதினம் வாயிலாக நமக்கு புலப்படுகிறது.

## மருத்துவக் குறிப்புகள்

உடலின் உள்ளார்ந்த குணப்படுத்தும் திறனை நம்பி, இயற்கையான முறைகள் மூலம் நோயைத் தடுப்பதற்கும் குணப்படுத்துவதற்கும் முக்கியத்துவம் அளிக்கும் மருத்துவ முறை இயற்கை மருத்துவம் ஆகும். பழங்காலத்தில் மக்கள் இயற்கையோடு இணைந்த வாழ்வை மேற்க்கொண்டதால் இயற்கை மருதுவத்தை மிகவும் நம்பினர். இயற்கையாகக் கிடைக்க கூடிய மூலிகைகளைக் கொண்டு மருத்துவம் செய்தனர். பறம்பில் வாழும் வேளிர் மக்கள் பனம் பூவைத் தாங்கள் குலச் சின்னமாக வைத்திருந்தனர். மலைத்தொடர்களிலில் அலைந்து திரியும் மக்கள் தாகம் எடுத்தால் எந்தக் குட்டை நீரிலும் தாங்கள் வைத்திருக்கும் பனம் பூவை அதில் போட்டு சிறிது நேரம் கழித்து அந்த நீரைப் பருகி தாகத்தைத் தீர்த்துக் கொள்வார்கள். பனம் பூ நஞ்சு முறியாகச் செயல்படும். அது அழகு மட்டும் இல்லாமல் அருமருந்தாகவும் இருந்திருக்கின்றது. பொதினி மலையில் வாழும் மக்கள் மருத்துவத்தில் தேர்ந்தவர்களாக விளங்கினர். பூனை மயக்கி, ஆட்கொல்லி மரத்தின் அருகே செல்லும் மூலிகை ஆகியவற்றைக் கண்டுபிடித்து பயன்படுத்தி மருத்துவத்தில் சிறந்து விளங்கினர்.

"பொதினியில்தான் மிக அதிக மருத்துவக்குடிகள் இருக்கின்றனர். எண்ணற்ற தாவரங்களையும் தாதுக்களையும் அறிந்து அதனை மருந்தாக மாற்றியுள்ளனர்." (சு.வெங்கடேசனின்.,2018)

இதன் மூலம் பொதினி மக்களின் மருத்துவத் திறனை நாம் அறியலாம். மேலும் போரில் வெட்டுபட்ட சதையை மூலிகையைக் கொண்டு சரி செய்துள்ளனர். உடம்பில் உள்ள காயங்களை ஆற்றுவதற்கு மூலிகை போர்வையைச் செய்து அதைப் பயன்படுத்தி காயங்களை குணப்படுத்தினர் என்பதைச் சு.வெங்கடேசனின் வேள்பாரிப் புதினத்தின் மூலம் எண்ணற்ற மருத்துவக் குறிப்புகளை எடுத்துத்துரைக்கின்றது.

## முடிவுரை

ஓர் இலக்கியத்தைப் படிக்கும் போது அதில் வரும் இயற்கை வளங்கள், காதல் உணர்வுகள், காதலியை வர்ணிக்கும் அழகு ஆகியவற்றை மட்டும் உள்வாங்காமல் அந்த இலக்கியப் படைப்பின் மூலம் மனித குலத்திற்கு வழிவழியாக ஏதேனும் நன்மைகள் இருக்கின்றதா என்று ஆராயும் விதமாகப் படைப்புகளைக் கையாள வேண்டும் அந்த வகையில் சு.வெங்கடேசனின் வேள்பாரி புதினத்தில் காதல், வீரம், இயற்கை வளங்கள் மட்டும் இல்லாமல் மனித குலத்திற்கு வழி வழியாக வரும் நற்பண்புகளான கொடை, வீரம், அறநெறி தவறமை, சடங்குகள், மருத்துவக் குறிப்புகள் ஆகியவற்றை எடுத்துரைத்து மனித குலத்திற்குத் தற்போதுவரை பயன்படுகின்ற மூலிகைகளையும் மருத்துவக் குறிப்புகளையும் திறம்பட வேள்பாரிப் புதினத்தில் சமூகப் பங்களிப்புகள்குறித்த பதிவுகள் இடம்பெற்றுள்ளதை இவ்வாய்வு நமக்குத் தெளிவாக விளக்குகின்றது.

## References

Puliyur Kesikan (2019), Purananuru Moolamum Uraiyum, Saradha Publications, Chennai, India

Venkatesan, S. (2018), Velpari Volume – I, Vikatan Publications, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License